**C.C.No.97/2018** – **26.09.2022**

அ.சா.1 ___ வீரப்ப செட்டியார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:

21.02.2018ம் தேத புகார்தாரார் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிய **மனுவின் நகல் மற்றும் அஞ்சலக ரசீது அ.சா.ஆ.1.** புகார்தாரர் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிய புகார் மனுவை அவர்கள் பெற்றுக் கொண்டமைக்கான **அஞ்சலக ஒப்புகை அட்டை எண்ணம் -3 அ.சா.ஆ.2**. புகார்தாரர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான **டிஸ்சார்ஜ் சம்மரி அ.சா.ஆ.3.** புகார்தாரர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் **கார்டியாலஜி பிரிவில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணத்தின் நகல் அ.சா.ஆ.4**. (எதிரி தரப்பில் மேற்படி ஆவணம் ஒளி நகலாக இருப்பதால் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது). மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1)சம்பவத்திற்கு முன்பே எதிரிகளுடன் பேசிக் கொள்ள மாட்டேன் என்று சொன்னால் சரிதான். கோவில் பிரச்சனை ஏற்கனவே இருந்ததால் பேசிக் கொள்ள மாட்டேன். சுமார் 4, 5 வருடங்களாக பேசிக் கொள்ள மாட்டேன். 1வது எதிரி நிரந்தரமாக எங்கு தங்கி உள்ளார் என்றால் கோயமுத்தூரில் வசிக்கிறார். 2வது எதிரி பணியிலிருந்து ஓய்வு பெற்று சண்முகநாதபுரத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். 15.1.2018ம் தேதி எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்று சொன்னால் காலை சுமார் 6.30 மணியளவில் சம்பவம் நடந்தது. சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்றால் பேங்க் வீதியில் ராதாகிருஷ்ணன் செட்டியார் வீட்டிற்கு
முன்பாக நடந்தது,

2) ராதாகிருஷ்ணன் செட்டியார் வீட்டருகே யார் யார் வீடு உள்ளது என்றால் கணேசன் செட்டியார் வீடு உள்ளது. சம்பவ இடத்திற்கு கிழக்கு, மேற்கே மற்றும் தெற்கே வீடுகள் உள்ளதா என்றால் காலியிடங்களாக மட்டும் இருக்கின்றன. நல்லமுத்து, காளிமுத்து மற்றும் ரவி ஆகியோர்களின் வீடுகள் சம்பவம் இடம் அருகே உள்ளது என்றால் சரிதான். நல்லமுத்து, காளிமுத்து மற்றும் ரவி ஆகியோர்கள் எந்த வீதியில் வசித்து வருகிறார்கள் என நான் மனுவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் மனுவில் சம்பவம் நடந்த இடம் எந்த வீதி என்று தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஐஓபி பேங்க் வீதி என்று தெரிவித்துள்ளேன்.

3) சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியன்று கடும் குளிரான

நாள் என்றால் சரியல்ல. குளிராக இருந்தது என்று சொல்ல முடியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் மாதம் குளிர்காலம் என்பதால் பொதுவாக 70 வயதிற்கு மேற்பட்ட நபர்கள் சுவாச பிரச்சனை சம்பந்தமாக 7.00 மணிக்கு தான் எழுந்திருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் 5.00 மணிக்கே எழுந்து விடுவேன். எனக்கு எந்தவிதமான நோயும், சுவாசப்பிரச்சனையும் கிடையாது. 2வது எதிரிக்கு சுவாசப் பிரச்சனை நோய் இருப்பதால் காலை 8.00 மணிக்கு தான் சம்பவ தினத்தன்று எழுந்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

4) நான் சம்பவத்தின் போது நடந்து சென்று கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. சைக்கிளில் சென்று கொண்டிருந்தேன். நான் சைக்கிளில் போகும் போது தடுமாறி விழுந்ததால் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.நான் சைக்கிளில் இருந்து விழவில்லை. நான் சைக்கிளிலிருந்து விழுந்ததால் எனக்கு முழங்கால் மற்றும் கைகளில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி கீழே கிடந்த கட்டையில் பின் மண்டையிலும், இடது தோளிலும் அடித்ததால் தான் ரத்த காயம் ஏற்பட்டது. என்னை கீழே தள்ளிய பின்னர் 2வது எதிரி கட்டையால் எனது முழங்காலில் ரத்த காயத்தை ஏற்படுத்தினார்.

5) நான் காரைக்குடியில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேனா என்றால் இல்லை. சரண்யா என்ற தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட போது அவர்கள் மேல் சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள். நான் ஆம்புலன்சில் என்னை மதுரைக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் ஆம்புலன்சில் சென்றதை சொல்லவில்லை. ஆனால் மதுரைக்கு சென்றதை சொல்லி உள்ளேன். நான் சரண்யா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அந்த மருத்துவமனையில் அவர்களால் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

6) சரண்யா மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை சுமார் 7.30ல் இருந்து 8.00 மணியளவில் சென்றேன். அங்கிருந்து மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்று சொன்னால் என்னை அவசர சிகிச்சை பிரிவில் வைத்து விட்டதால் என்னால் மணிணை கூற இயலாது. காரைக்குடியிலிருந்து மதுரைக்கு 2.00 மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்று சொன்னால் போக்குவரத்து நெரிசலை பொறுத்து நேர அளவு மாறுபடலாம். அதனால் என்னால் சொல்ல இயலாது. மீனாட்சி மிஷன்

மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எனது மகன் என்று சொன்னால் சரியலல.

7) நான் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சாலை விபத்தில. அடிபட்டதாக கூறி தான் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்று சொன்னால் அவ்வாறு சொல்லவில்லை. எனக்கு மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான காயச்சான்று ஆவணங்களை முழுமையாக தாக்கல் செய்யவில்லை என்றும், அதில் சிறுகாயங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். சம்பவம் நடந்த தேதியில் சம்பவம் நடந்த ஊரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் விபத்தினால் ஏற்பட்ட காயம் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றும் மேற்படி புகார் மீது காவல் துறையினர் விசாரணை செய்து எனக்கு ஏற்பட்ட காயம் விபத்தினால் ஏற்பட்டது என தெரிய வந்ததால் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8) எதிரிகள் மீது நான் பலமுறை புகார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் நல்லமுத்து, காளிமுத்து, ரவி ஆகியோர்கள் என்னிடம் வேலை செய்வதால் என்கு ஆதரவாக சாட்சியமளிப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிகள் மீது பொய்யான குற்றச்சாட்டை முன் வைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை:

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/-)ஆர்.எம்.மாரிமுத்து,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்